- விருந்துகளில் பங்குபற்றும்போது மற்றவர்கள் அருவருக்கும் முறையில் நடந்துகொள்ளாதிருத்தல்.
- விருந்தளிப்பவருக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தல், நன்றி செலுத்தல்.
- மூன்று நாட்களுக்கு மேல் தங்காதிருத்தல்.

**எனவே நாமும்**

- விருந்தளிப்பதை மகிழ்வோடு நடைமுறைப்படுத்துவோம்.
- விருந்தாளியை கௌரவிப்போம்.
- விருந்துக்குச் சென்றால் பண்போடு நடந்துகொள்வோம்.
- அதன் மூலம் சமூகத்தில் பரஸ்பர நல்லுறவோடும் நேசத்தோடும் வாழ்வோம்.
- அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்வோம்.

**பயிற்சி**

1. உங்கள் வீட்டுக்கு வரும் விருந்தாளியை எவ்வாறு உபசரிப்பீர்கள்?
2. உமது நண்பனின் வீட்டுக்கு நீர் விருந்தாளியாகச் சென்றால் எவ்வாறு நடந்து கொள்வீர் என்பதைச் சுருக்கமாக எழுதுக.
3. விருந்தளிப்பதன் மூலம் பெறப்படுகின்ற சமூகப் பயன்களைப் பட்டியற்படுத்துங்கள்.